செ.வெ.எண்: 776/2016 நாள்: 03.11.2016

**மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள், வாள்வச்சகோஷ்டம் அருள்மிகு ஸ்ரீமகிஷாசுரமர்த்தினி திருக்கோவிலில் உள்ள தெப்பகுளத்தை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள், வாள்வச்சகோஷ்டம் அருள்மிகு ஸ்ரீமகிஷாசுரமர்த்தினி திருக்கோவிலில் உள்ள தெப்பகுளத்தை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அருகில் உள்ள வாள்வச்சகோஷ்டம் அருள்மிகு ஸ்ரீமகிஷாசுரமர்த்தினி திருக்கோவிலில் உள்ள தெப்பகுளத்தை மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள், நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தெப்பகுளத்தில் உள்ள சுற்றுசுவரை மாற்றி, பழமை மாறாமல் புனரமைப்பது குறித்தும், தெப்பகுளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து, அதனை சீர் செய்யவும், தெப்பக்குளத்தில் உள்ள தண்ணீரை மாற்றி, தூர்வாரி செப்பனிடவும், ரூ.8.5 இலட்சம் செலவில் நடைபெற்ற திருப்பணிகளை பார்விட்டு ஆய்வு செய்தார். மேலும் மூலஸ்தான கருவறை மேல் கூரையை செப்பனிட படுவது குறித்தும், அதன் மதிப்பீடுகள் தயார் செய்வது குறித்தும் ஆலோசனை செய்தார்கள்.

ஆய்வின் போது திரு. என்.என்.ஸ்ரீஜயப்பன், திரு. சந்தையடி பாலகிருஷ்ணன், திரு. கனகராஜன், திரு. ரவீந்திரன், திரு. பார்த்திபன், திருமதி. தங்கம், திரு. மோகன், திரு. கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.